Takkavi loans for fertilizers

DEPUTY SPEAKER : As the hon. Member who has given notice of Q. No. 1733 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 1733 *Q.*—SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any complaint has been received that a fraud by impersonation has been committed in granting Takkavi loans to agriculturists for the purchase of fertilizers;

(*b*) whether the Government have received information that certain village karnams in Gingee taluk abet such crimes; and

(*c*) the number of loans on which enquiries were held in Gingee taluk, and the result thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes, Sir. All the cases relate to Gingee taluk only.

(*c*) In Gingee taluk, loans have been disbursed in four cases to wrong persons under the Intensive Manuring Scheme due to impersonation. In all the four cases enquiries have been completed. In all the cases criminal prosecution has also been sanctioned against the karnams and village headman involved.

High schools

* 1734 *Q.*—SRI N. R. THIAGARAJAN, SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்ஜியத்தில் ஜில்லாவாரியாக இந்த நிதியாண்டில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் மொத்தம் ஆரம்பிக்க உத்தரவிடப்பட்டது ?

(இ) இதில் ஆண்களுக்கு எத்தனை ? பெண்களுக்கு எத்தனை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், மேசை பேரில் வைக்கப்பட்டிருக்கும் ஸ்டேட்மெண்டிலே பல உயர்நிலைப் பாடசாலைகளுக்கு உத்தரவு கொடுத்திருந்தும் விடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக வட ஆற்காடு ஜில்லாவில், கட்டமேட்டு வெள்ளத்தில் ஹைஸ்கூல் திறக்க உத்தரவு கொடுக்கப்பட்டது. ஆனால் அது இந்த லிஸ்டில் இல்லை. அதே போல, எஸ். மேட்டூர், சேம்பள்ளம், குடியாத்தம் பெண்கள் பள்ளி டெபர் பண்ணி வைத்திருக்கிறது.

DEPUTY SPEAKER : இந்த ஸ்டேட்மெண்டு 1960–61 பற்றியது, 1961–62 சம்பந்தமானது அல்ல.

SRI V. K. KOTHANDARAMAN : ஆகவே அப்படி முன்னுக்கு வந்திருக்கும் ஹைஸ்கூல்களை ஆரம்பிக்க உத்தரவு இடப்படுமா ? (சிரிப்பு).

THE HON. SRI C. SUBRAMANIAM : 1960–61 பற்றிய ஜாபிதா இது.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்தக் கேள்வி நான் அக்டோபர் 1960-ல் போட்டது. இப்பொழுதுதான் பதில் வருகிறது. இதிலேயும் "In this Financial year" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

---

[a] Printed as Appendix IV on pages 508–510 *infra*.

22nd September 1961]

ஸ்டேட்மெண்டிலே, 1960-61 என்று சொல்லப்படவும் இல்லை. இப்படிப் பட்ட தவறுகள் வருங்காலத்திலாவது நேராமல் பார்த்துக்கொள்ளுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர் கேள்வியே "(அ) 1960-61-ல் எங்கெங்கே உயர்நிலைப் பள்ளிகள் (1) ஆண்களுக்காகவும், (2) பெண்களுக்காகவும் திறக்கப்பட உத்தரவிடப்பட்டது (ஜில்லாவாரியாக)" ? என்று தான் இருக்கிறது. ஆகவே, பதிலும் 1960-61-க்காகத் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

DR. SRIMATHI SOUNDARAM RAMACHANDRAN : பெண்களுடைய கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் இந்தக் காலத்தில், 300 பெண்களுக்கும் அதிகமாக எங்கெல்லாம் கோ-எஜுகேஷன் இருக்கிறதோ, ஹைஸ்கூல்களில், அங்கெல்லாம் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத் திறக்க சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : உயர்நிலைப் பள்ளிகளை சர்க்கார் ஆரம்பிப்பது இல்லை. யாராவது தனிப்பட்டவர்களோ அல்லது ஜில்லா போர்டோ செய்துவந்தார்கள். இப்பொழுதும் யாராவது அப்படித் திறக்க விண்ணப்பம் செய்துகொண்டால், கட்டாயம் அனுமதி கொடுக்கப் படும். அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிறது இந்த வருஷத்திலே கூட.

SRI K. ANBAZHAGAN : உயர்நிலைப் பள்ளிகள் துவக்க என்று கட்டவேண்டிய ரூ. 5,000 அல்லது ரூ. 7,000 தொகையைக் கட்டியும்கூட அவற்றைத் திறக்க அனுமதி கொடுக்கப்படவில்லை. அப்படிப்பட்டவைகளுக்கு அனுமதி கொடுக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 1960-61 பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இப்பொழுது இல்லை. தொகையைக் கட்டிவிட்டால் மட்டும் போதாது. அதன் பக்கத்தில் வேறு பள்ளி வசதி இல்லாமல் இருக்க வேண்டும்.

Teachers transferred under Pataskar Award—Pay scale of

* 1735 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the teachers who were transferred to the Madras State under Pataskar Award are paid the same scale of pay like the teachers in the rest of the state; and

(*b*) if so, from what date?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) These teachers are being allowed from 1st April 1960 the pay and allowances drawn by them under the Andhra Pradesh Government on the eve of transfer. The question of allowing them the Madras scales of pay and allowances is under consideration.

SRI K. VINAYAKAM : The rise in salary as adumberated in the recommendations of our Pay Commission was not applied to teachers coming from Andhra Pradesh and it is nearly 1½ years since the recommendations were announced. How long will the Government take to consider these proposals and give them redress?